**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு.M.சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, மானாமதுரை
2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 01ம் நாள் திங்கட்கிழமை

**I.A.No.5/2025**
**in**
**MCOP. No. 32/2020**

1. இருளாயி
2. மதயானை(இறப்பு)
3. கர்ணன்
4. கல்யாணசுந்தரம்
5. அமுதவள்ளி
6. சித்ரா
7. நர்த்தனா
8. அர்ஜுன் ராஜா

....மனுதாரர்கள்/மனுதாரர்கள்

/எதிர்/

1. ராஜு
2. தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட்., அதன் கிளை மேலாளர் மூலம்., சிவகங்கை

....எதிர்மனுதார்கள்/எதிர்மனுதார்கள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 18.08.2025ம் தேதி என் முன்னர் வந்த போது மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இராஜசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், 2ம்எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் மனுவில் ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது

நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:–

**உத்திரவு**

இம்மனுவானது, அசல் மனுவின் இறந்துபோன 2ம் மனுதாரர் மதயானையின் வாரிசுகளை அசல் மனுவில் 6 முதல் 8 மனுதாரர்களாக சேர்த்து வழக்கு நடத்த தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 22 விதி 3ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

அசல் மனுவின் 2ம் மனுதாரர் 28.12.2022ல் இறந்துவிட்டார் என்றும் இறந்துபோன மதயானையின் வாரிசுகளாக மதயானையின் தாயார் இருளாயி, மனைவி சித்ரா மற்றும் மேற்படியாரின் பிள்ளைகளான நர்த்தனா, அர்ஜுன்ராஜா ஆகியோர்களை அசல் மனுவில் தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளது என்றும் 4ம் மனுதாரர் தான் மற்ற மனுதாருக்கும் சேர்த்து மேற்ப்பார்வை பார்த்து வருகிறார் என்றும் மதயானையின் வாரிசுகளை தரப்பினராக சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்றும் எனவே இறந்துபோன 2ம் மனுதாரர் மதயானையின் வாரிசுகளை அசல் மனுவில் 6 முதல் 8 மனுதாரர்களாக சேர்த்து வழக்கு நடத்த தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 2ம் எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகின்றன என்றும் தாவா விபத்தினால் இறந்து போன ராஜுக்கு சுமார் 75 வயதுக்கு மேல் இருக்கும் என்றும் அவர் எந்த வேலையும்

செய்யாமல் எந்த வருமானமும் ஈட்டாமல் இருந்தார் என்றும் அவர் விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் விளைவாகத் தான் இறந்தார் என்பது பொய் என்றும் இறந்து போன ராஜூ என்பவரை பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றும் மேலும் உத்தேச மனுதாரர்கள் இறந்துபோன ராஜூயின் வாரிசுகள் கிடையாது என்றும் மேற்படி ராஜூ என்பவரை இந்த உத்தேச மனுதாரர்கள் எந்தக் காலமும் சார்ந்து இருக்கவில்லை என்றும் எனவே மனுதார்கள் தரப்பில் 2ம் மனுதாரரின் வாரிசுகளை சேர்க்கக் கோரும் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அசல் மனுவின் 2ம் மனுதாரர் மதயானை 28.12.2022ல் இறந்துவிட்டார் என்றும் இந்த 4வது மனுதாரர் தான் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து வழக்கை நடத்தி வருகிறார் என்றும் இறந்து போன மதயானையின் வாரிசுளை அசல் மனுவில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் உத்தேச மனுதாரர்கள் இறந்து போன ராஜு என்பவரின் வாரிசுகள் இல்லை என்றும் அவர்கள் ராஜு என்பவரை சார்ந்து எந்தக் காலமும் இருக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது, மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது எதிர்மனுதார்கள் தரப்பில் இறந்து போன ராஜு என்பவரை சார்ந்து உத்தேச மனுதாரர்கள் இருக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ள நிலையில் உத்தேச எதிர்மனுதாரர்கள் இறந்து போன ராஜு என்பவரை சார்ந்து இருந்தார்களா இல்லையா என்பதை அசல் மனுவில் முழு விசாரணைக்கு பின்பு தான் முடிவு செய்ய முடியும். மேலும் அசல் மனுவின் 2வது மனுதாரரின்

வாரிசுகளை அசல் மனுவில் தரப்பினராக சேர்க்கவேண்டியது அவசியமாக உள்ளது என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும் அசல் மனுவில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.